இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, மகவேற்பு (திருத்தச்) சட்டம்

[1992, மார்ச் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1992, மார்ச் மாதம் 13 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 75

தபாற் செலவு : ரூபா 1.00

## 1992 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, மகவேற்பு (திருத்தச்) சட்டம்

[1992, மார்ச் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

வ. —ஓ. 73/88

மகவேற்புக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1992 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, மகவேற்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) (61 ஆம் அத்தியாயமான) மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 61 ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் 5 ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம்:—

"5அ. (அ) விண்ணப்பம் எந்தப் பிள்ளை தொடர்பில் செய்யப்பட்டதோ அந்தப் பிள்ளையை மகவேற்பதற்கு, இலங்கை பிரசையும் இலங்கையில் வதிகின்றவரும் இலங்கையை வாழிடமாகக் கொண்டவருமான வேறு ஆள் எவரும் விண்ணப்பித்திராவிடின், இலங்கையின் ஒரு பிரசையல்லாதவரும் இலங்கையை வாழிடமாகக் கொள்ளாதவரும் அல்லது இலங்கையில் வதியாதவருமான எவரேனும் விண்ணப்பதாரர் சார்பில் மகவேற்புக் கட்டளை ஒன்று செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) (i) எந்நேரத்திலும் இலங்கையின் பிரசையாயில்லாதிருக்கின்றவரும் அல்லது பிரசையாயில்லாதிருந்தவரும், இலங்கையின் வதியாதவரும் இலங்கையை வாழிடமாகக் கொள்ளாதவருமான விண்ணப்பகாரர்களின் சார்பில் ஏதேனும் பஞ்சாங்க ஆண்டில் எல்லா நீதிமன்றங்களினுலும் செய்யப்படக்கூடியவரான மகவேற்புக் கட்டளைகளின் எண்ணிக்கை ஒழுங்குவிதியினுல் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(ii) எந்நேரத்திலும் இலங்கையின் பிரசையாயில்லாதிருக்கின்றவரும் அல்லது பிரசையாயில்லாதிருந்தவரும், இலங்கையில் வதியாதவரும் இலங்கையை வாழிடமாகக் கொள்ளாதவருமான விண்ணப்பகாரர்களின் சார்பில், கட்டளை எந்தப் பஞ்சாங்க ஆண்டில் செய்யப்பட வேண்டுமோ அந்தப் பஞ்சாங்க ஆண்டிற்காக, அத்தகைய கட்டளையை ஆக்குதல் (i) என்னும் பந்தியின் கீழ் விதித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சுவதான பயனையுடையதாகவிருப்பின் மகவேற்புக் கட்டளை ஒன்று செய்யப்படுதலாகாது.". அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான காப்
வாசகத்திற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இ
வதன் மூலம்:—

"ஆயின் இலங்கைப் பிரசையல்லாதவரும் இலங்கையில் வ
யாதவரும் இலங்கையை வாழிடமாகக் கொள்ளாதவருமா
இரு வாழ்க்கைத் துணைவர்களினால் —

(அ) ஆகக் குறைந்தது ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொ
காலப்பகுதிக்கு அனாதை இல்லங்கள் கட்டளைச் சட்ட
தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது அரசாங்கத்தின
பேணப்படும் அனாதை இல்லம், இல்லம் அல்லது வே
நிறுவனம் ஒன்றிற்கு அப்போதைக்கு பொறுப்பாகவுள்
ஓர் ஆளின் பராமரிப்பில், கட்டுக்காவலில் அல்லது கட்டு
பாட்டில் இருக்கும்; அத்துடன்

(ஆ) நன்னடத்தை சிறுவர், பராமரிப்புச் சேவைகள் ஆணை
யாளரால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பிள்ளையை,

மகவேற்பதற்கு அதிகாரம் வழங்குகின்ற மகவேற்புக் கட்டளை
ஒன்று, அதிகாரம் வழங்கப்படவேண்டிய மகவேற்பின், சமூ
உளவியல் அம்சங்கள் மீதும், 4 ஆம் பிரிவில் குறித்துரைக்க
பட்ட கருமங்கள் மீதும், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு
சேவைகள் ஆணையாளரிடமிருந்து அறிக்கையொன்றைக் கோ
அதைக் கவனத்திலெடுத்த பின்னர், இணை விண்ணப்பகார
ளின் சார்பில் மகவேற்புக் கட்டளை ஒன்றைச் செய்வதை நிய
யப்படுத்துகின்ற விசேட சூழ்நிலைகள் உள்ளனவென நீதிமன்ற
திருப்திப்படுகின்றவிடத்து, அத்தகைய வாழ்க்கைத் துணைவர
ளின் இணை விண்ணப்பத்தின்மீது செய்யப்படலாம். ஆணைய
ளர், அந்நோக்கத்திற்கென நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்படு
காலப்பகுதியினுள் நீதிமன்றத்திற்கு அத்தகைய அறிக்கை
யைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய காலப்பகுதி, நீதி
மன்றம் அறிக்கையைக் கோரிய தேதியிலிருந்து பதினான்கு
நாட்களுக்குக் குறையாததும் 28 நாட்களுக்கு மேற்படாதத
மாயிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிக்கைக்கு
பின்வருவனவற்றை இணைத்தலும் வேண்டும் :—

அந்நாட்டிலுள்ள இலங்கைக் குடியரசின் தத்துவம் பெற்
பிரதிநிதியினால் மெய்யென்று செய்யப்பட்ட —

(அ) விண்ணப்பகாரர்களின் நாட்டினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட
நிறுவனமொன்றிலிருந்து விண்ணப்பதாரர்கள் தொட
பிலான மனை நிலைமை பற்றிய அறிக்கை ஒன்று; அத்
துடன்

(ஆ) விண்ணப்பகாரர்கள் எந்தப் பொலிசு இடப்பரப்பில்
வதிகின்றனரோ அந்தப் பொலிசு இடப்பரப்புத்தொட
பான பொலிசு அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட ஒரு
பொலிசு அறிக்கை.

இவ்வுட்பிரிவில் —

"மனை நிலைமை பற்றிய அறிக்கை" என்பது விண்ணப்பகாரர்களின் உள சுகாதாரத்தின் மீதான, அவர்களின் சமூக, சமய நிதிப் பின்னணி மீதான, அத்துடன் ஒரு பிள்ளையை மகவேற்பதற்கான அவர்களின் தகுதி மீதான ஓர் அறிக்கையெனப் பொருள்படும்; அத்துடன்

"பொலிசு அறிக்கை" என்பது விண்ணப்பகாரர்களின் நடத்தை, செயற்பாடுகள் என்பன பற்றிய ஓர் அறிக்கையெனப் பொருள்படும்".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(இ) நீதிமன்றம் அனுமதிக்கக்கூடியவாறான அத்தகையது தவிர்ந்த மகவேற்பிற்கான பிரதிபலனாக ஏதேனும் கொடுப்பனவை அல்லது வேறு வெகுமதியை —

(i) விண்ணப்பகாரர் எவரேனும் ஆளிடமிருந்து பெற்றிருக்கவில்லை அல்லது பெறுவதற்கு இணங்கியிருக்கவில்லை அத்துடன் எவரேனும் ஆளுக்குச் செய்திருக்கவில்லை அல்லது கொடுத்திருக்கவில்லை அல்லது கொடுப்பதற்கு இணங்கியிருக்கவில்லை என ; அல்லது

(ii) ஆள் எவரும் விண்ணப்பகாரரிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை அல்லது பெற்றுக் கொள்வதற்கு இணங்கிக்கொள்ளவில்லை, அத்துடன் விண்ணப்பகாரருக்குச் செய்திருக்கவில்லை அல்லது கொடுக்கவில்லை அல்லது கொடுப்பதற்கு அல்லது செய்வதற்கு இணங்கவில்லை என.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

"(1) (இப்பிரிவு நடைமுறைக்கு வருவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ அத்தகைய மகவேற்புக் கட்டளை ஆக்கப்பட்டிருந்தாலும்) ஒரு பிள்ளையை மகவேற்பதற்கு இரு இணை வாழ்க்கைத் துணைவர்களுக்கு அதிகாரம் வழங்கி மகவேற்புக் கட்டளையொன்றை ஒரு நீதிமன்றம் செய்கின்றவிடத்து, அப்போது

(அ) அத்தகைய வாழ்க்கைத் துணைவர்கள் ; அல்லது

(ஆ அத்தகைய வாழ்க்கைத் துணைவர்களின் திருமணம், மகவேற்புக் கட்டளைத் தேதிக்குப் பின் குலைக்கப்பட்டிருப்பின், அத்தகைய வாழ்க்கைத் துணைவர்களின் எவரேனும் ஒருவர்; அல்லது

(இ) இரு வாழ்க்கைத் துணைவர்களும் இறந்திருக்குமிடத்தும்; அத்துடன்

(i) பிள்ளை பதினெட்டு வயதிற்கு மேற்பட்டிருப்பின். பிள்ளை; அல்லது

(ii) பிள்ளை பதினெட்டு வயதிற்குட்பட்டதாகவிருப்பின், பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவராகவுள்ள, பிள்ளையின் பாட்டி, பாட்டனார், மாமா, மாமி, அல்லது சகோதரன் அல்லது சகோதரி அல்லது பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவை ஆணையாளர்.

அப்பிள்ளையின் பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டத்தின்கீழ் முன்னர் பதிவுசெய்யப்பட்டிருக்கும் நிகழ்வு எப்படியிருப்பினும், அப்பிள்ளையின் இயற்கைப் பெற்றோர்களாக, அத்தகைய வாழ்க்கைத் துணைவர்களின் பெயர்களை உட்புகுத்துவதன் மூலம் அப்பிள்ளையின் பிறப்பை மீளப் பதிவு செய்வதற்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் எழுத்திலான வெளிப்படுத்துகை ஒன்றைப் பதிவாளர்—தலைமையதிபதிக்குச் செய்யலாம், அத்தகைய ஒவ்வொரு வெளிப்படுத்துகையும் ஐந்து ரூபாய் பெறுமதியான முத்திரை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழான வெளிப்படுத்துகை ஒன்று கிடைக்கப் பெற்றதன் மேல், பதிவாளர்—தலைமையதிபதி, அத்தகைய வெளிப்படுத்துகை எந்தப் பிள்ளை தொடர்பில் செய்யப்பட்டுள்ளதோ அந்தப்பிள்ளை தொடர்பில் ஒரு நீதிமன்றத்தினால் மகவேற்புக் கட்டளையொன்று ஆக்கப்பட்டிருக்கிறதெனவும், வெளிப்படுத்துநருக்கு அத்தகைய பிள்ளையுடனான உறவுமுறைபற்றியும் அவர் திருப்தியடைந்தால், பதிவாளர்—தலைமையதிபதி, விதித்துரைக்கப்பட்டவாறான முறையில், பிறப்பை மீள்பதிவு செய்வித்தல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 10 இ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 10இ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :—

“இலங்கைக்கு வெளியே வதியும் ஒவ்வொரு மகவேற்பவரும் அறிக்கையைக் கொடுத்துதவுதல்.

10இ. மூன்றாம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒரு மகவேற்புக் கட்டளையினால், ஒரு பிள்ளையின் மகவேற்புக்கு அதிகாரம் வழங்கப்படுமிடத்து, அத்தகைய மகவேற்பவரின் நாட்டினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்டு அந்நாட்டிலுள்ள இலங்கைக் குடியரசின் தத்துவம் பெற்ற பிரதிநிதியினால் மெய்யென்று உறுதி செய்யப்பட்ட—

(அ) அத்தகைய பிள்ளையின் மகவேற்பு அந்நாட்டில் சட்டப்படி உறுதிப்படுத்தப்படும்வரை பிள்ளை தொடர்பான காலாண்டு;

(ஆ) அந்நாட்டில் மகவேற்பு சட்டப்படி எந்தத் தேதியில் உறுதிசெய்யப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து முதல் மூன்று ஆண்டுகளுக்கான பிள்ளையின் புகைப்படங்களுடன் அத்தகைய தொடர்பிலான அரையாண்டு;

(இ) அத்தகைய பிள்ளை பத்து வயதை அடையும் வரை அத்தகைய பிள்ளை தொடர்பிலான ஆண்டு;

முன்னேற்ற அறிக்கைகளை நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளருக்குக் கொடுத்துதவுதல் அத்தகைய ஒவ்வொரு மகவேற்பவரின் கடமையாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"கொடுப்பனவின் மீதான கட்டுப்பாடு.

14. நீதிமன்றத்தின் அனுமதியுடனன்றி, இப்பாகத்தின் கீழ் எவரேனும் பிள்ளையை மகவேற்பதற்கான பிரதிபலனாக ஏதேனும் கொடுப்பனவை அல்லது வெகுமதியை எவரேனும் ஆளுக்குச் செய்கின்ற அல்லது கொடுக்கின்ற அல்லது செய்வதற்கு அல்லது கொடுப்பதற்கு இணங்குகின்ற அல்லது எவரேனும் ஆளிடமிருந்து பெறுகின்ற எவரேனும் மகவேற்பவர், அத்துடன் நீதிமன்றத்தின் அனுமதியுடனன்றி எவரேனும் மகவேற்பவரிடமிருந்து ஏதேனும் அத்தகைய கொடுப்பனவை அல்லது வெகுமதியைப் பெறுகின்ற அல்லது வெகுமதியைச் செய்கின்ற அல்லது கொடுக்கின்ற அல்லது செய்வதற்கு அல்லது கொடுப்பதற்கு இணங்குகின்ற எவரேனும் ஆள் இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், ஒரு நீதிவான் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரு ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலப்பகுதிக்கு இரு வகையில் ஒருவகையிலான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 27அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"சட்ட விரோதமான கட்டுக் காவலுக் கெதிரான தடை.

27அ. (1) எவரேனும் ஆள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி—

(அ) ஒரு பிள்ளையைக் கருவுற்றிருக்கும் எவரேனும் பெண்ணை, அவர் கருவுற்றிருக்கும் காலத்தின்போது;

(ஆ) அதன் தாயுடனோ அல்லது தாயின்றியோ எவரேனும் பிள்ளையை,

அத்தகைய பிள்ளையை மகவேற்பிற்காகக் கொடுக்கும் நோக்கத்திற்கெனச் சட்டவிரோதமான கட்டுக்காவலில் வைத்திருத்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுமின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரு ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒரு வகையான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(உஉ) அரசாங்க ஒழுங்கமைப்பில்லாத ஓர் ஒழுங்கமைப்பினால் பேணப்படுகின்றதும் நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துடன் பதிவு செய்யப்பட்டதுமான ஏதேனும் சிறுவர் இல்லத்துக்கு அப்போதைக்குப் பொறுப்பாகவுள்ள".

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

9. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.